பக்கங்கள் 22+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆடி 08 வியாழக்கிழமை 24.07.2025 | அதிர்வு 355

## ஏறாவூர் விபத்தில் இளைஞர் மரணம்!



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயிலம்பாவெளி பிரதான வீதியில் இடம்பெற்ற 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்!

## அரசை வலியுறுத்தி நல்லூரில் கவனவீர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நீண்ட காலமாகச் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பால் முன்னெடுக்கப்படும் ‘விடுதலை’ எனும் தொனிப்பொருளிலான கவன வீர்ப்புப் போராட்டம் இன்று வியாழக்கிழமையாழ்.நல்லூர்கிட்டுபூங்காவில் முன்னெடுக்கப்பட்டது. 03▶



# மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில்

## வரும் ஒக்டோபர் 23 இலங்கையர் தின நிகழ்வு என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு




மாகாண சபைத் தேர்தல் 2026 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெறும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.


இலங்கையர் தினத்தை எதிர்வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயணத்தில் புதியதொரு ஆரம்பமாக இலங்கையர் தின நிகழ்வு அமையும் என உறுதியாக நம்புகின்றோம். தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய பாரிய பொறுப்பு எமது அரசுக்கு உள்ளது. அதனை நோக்கிப் பயணிப்போம்.

ஒக்டோபர் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் நடவடிக்கை தொடரும். இவ்வாறு நல்லிணக்கம் நோக்கி விரிவான பயணம் தொடரும்.” – என்றார்.



# மாங்குளத்தில் இன்று கிணற்றில் இருந்து தாய், இரு பிள்ளைகளின் சடலங்கள் மீட்பு!

## பொலிஸார் பல கோணங்களில் விசாரணை

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள அரச வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவரின் கிணற்றில் இருந்து இன்று வியாழக்கிழமை தாய் மற்றும் இரு பிள்ளைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் வசித்து வந்த தாயும் இரு பிள்ளைகளும் தங்களது வீட்டில் இருந்து சுமார் 500 மீற்றருக்கு அப்பால் உள்ள அரச வீட்டுத் திட்டத்தில் உள்ள வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவரின் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இன்று காலை கிணற்றின் அருகில் கைப்பை ஒன்றும் இதர பொருட்கள் சிலவும் காணப்பட்டதை அடுத்து ஊரில் உள்ள மக்கள் அந்த விடயம் தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனடிப்படையில் அங்கு சென்ற கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் கிணற்றில் சடலங்கள் இருப்பதை அடையாளம் கண்டனர்.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்டதன் பின்னர் சடலங்கள் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்களை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர்கள் 38 வயதான தாயும், 11 வயதான மகனும், 4 வயதான மகளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா அல்லது என்ன நடந்தது என்பது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மதுபான சாலைக்கு அருகில் இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாவடி பகுதியில் உள்ள மதுபான சாலைக்கு அருகில் நேற்று புதன் கிழமை மாலை இடம்பெற்ற தாக்குதலில் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த நேசராஜன் சர்வேந்திரன் (வயது 51) என்பவரே படுகாயமடைந்த நிலையில், யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் மேற்படி நபர் மீது வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தமிழ் அரசியல்...**

இதில் சிறை வாழ்க்கை கண்காட்சி, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாட்டப்படவுள்ள விடுதலை விருட்சத்துக்கான விடுதலை நீர் சேகரிப்பும் இடம்பெற்றது.

இதில் தமிழ் அரசியல் கைதியாக 15 ஆண்டுகள் சிறையில் இருந்த அரசியல் கைதி விவேகாநந்தனூர் சதீஸ் எழுதிய 'துருவேறும் கைவிலங்கு' நூல் அறிமுகமும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்குச் சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவும் தயாரித்து வழங்கப்பட்டது.

இன்று ஆரம்பமான இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நாளையும் தொடரவுள்ளது.

























# ரோஹிதவின் மருமகனுக்கு விளக்கமறியல்

புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களை பொருத்திய வாகனம் ஒன்றைச் சட்டவிரோதமாகப் பதிவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவர் இன்று காலை மத்துகம நீதிவான் நீதிமன்றில் சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜகத் விதான எம்.பியின் மகன் இன்று பிணையில் விடுவிப்பு!



ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகனைப் பிணையில் விடுதலை செய்யுமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜகத் விதானவின் மகன் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜகத் விதானவின் மகனை 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜகத் விதானவின் மகன், சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைப் பொருத்திய வாகனம் தொடர்பில் கடந்த சனிக்கிழமை களுத்துறை மத்துகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!



காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், எப்பாவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகா இலுப்பல்லம பகுதியில் இன்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மகா இலுப்பல்லம பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் ஆவார்.

மேற்படி நபர் வாழைத்தோட்டத்துக்குள் நுழைந்த காட்டு யானையை விரட்ட முயன்ற போது யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று எப்பாவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஏறாவூர் விபத்தில்...**

விபத்தில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகரில் இருந்து ஏறாவூர் நோக்கிப் பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த கொங்கிறீட் தூணில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கரவெட்டி பிரதேச சபையின் அமர்வில்

# செம்மணி, கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி





**(வடமராட்சி நிருபர்)**

செம்மணியில் கொல்லப்பட்ட மக்களது ஆத்ம சாந்தி வேண்டியும் கருப்பு ஜூலையில் கொலை செய்யப்பட்ட மக்களது ஆத்ம சாந்தி வேண்டியும் கரவெட்டி பிரதேச சபை அமர்வில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபையின் அமர்வு நேற்று புதன்கிழமை (23) பிரதேச சபை தவிசாளர் கு. சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச சபையின் உப. தவிசாளர் தி. தயாபரன் பிரேரணை மூலம் செம்மணியில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் கருப்பு ஜூலையில் கொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதனை அடுத்து சபைக்கு சமூகமளித் திருந்த 30 உறுப்பினர்களும் எழுந்து நின்று மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பி னர்கள் கறுப்பு பட்டி அணிந்து சபைக்கு சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக் கது.

# கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் காணி நடமாடும் சேவை

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத் தின் கீழ் ஆவணங்களற்று நில அளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணித் துண்டுகளின் மீதான நடமாடும் சேவை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று (24.07) கணேசபுரம் கிராம அலுவலர் அலுவல கத்தில் நடமாடும் சேவை ஆரம்பமானது. எதிர்வரும் ஒக்ரோபர் 17 ஆம் திகதி (17.10) வரை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடமாடும் சேவை இடம்பெறவுள்து.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கிராம அலுவலர் பிரிவில் பொது மக்கள் சமூகமளிக்க வேண்டிய இடங்களும் நடவடிக்கைக்கு உரிய திகதி களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2025-07-25 கிருஸ்ணபுரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-07-29 மாயவனூர் கிராம அலுவலர் அலு வலகம், 2025-07 - 31 பெரியபரந்தன் கிராம அலுவலர் அலுவலகம்.

2025-08 -01 உருத்திரபுரம் கிழக்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-08-05 திருவையாறு கிராம அலுவலர் அலுவலகம், 2025-08 - 07 வட்டக்கச்சி கிராம அலுவலர் அலுவலகம், 2025-08 - 12 கனகாம்பிகைக்குளம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-08 - 14 ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-08 – 15 திருவையாறு மேற்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-08 – 19 புதுமுறிப்பு கிராம அலுவலர் அலுவலகம், 2025-08- 21 உதய நகர் கிழக்கு கிராம அலுவலர் அலுவல கம், 2025-08-22 கனகபுரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-08.26 அக்கராயன்குளம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-08-28 சிவநகர் கிராம அலுவலர் அலுவலகம், 2025-08-29 மாவடியம்மன் கிராம அலுவலர் அலுவலகம்.

2025-09-02 மலையாளபுரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-04 உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-09 இராமநாதபுரம் கிராம அலுவலர் அலு வலகம், 2025-09-11 செல்வாநகர் கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-12 இரத்தினபுரம் கிராம அலுவலர் அலு வலகம், 2025-09-16 உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-18, உதயநகர் மேற்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-19 திருநகர் தெற்கு கிராம அலுவலர் அலு வலகம், 2025-09-23 சிவிக்சென்டர் கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-25 ஜெயந்திநகர் கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-26 கிளி. நகரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-09-30 அம்பாள் நகர் கிராம அலுவலர் அலுவலகம்.

2025-10-02 கண்ணகைபுரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-10-03 அம்பாள்குளம் கிராம அலுவலர் அலு வலகம், 2025-10-07 திருநகர் வடக்கு கிராம அலுவலர் அலுவலகம், 2025-10 - 09 ஊற்றுப்புலம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-10- 10 ஆனந்த புரம் கிராம அலுவலர் அலுவலகம், 2025-10-14 விவேகானந்தநகர் கிராம அலுவலர் அலுவலகம், 2025-10-16 பாரதிபுரம் கிராம அலுவலர் அலுவல கம், 2025-10- 17 பொன்னகர் கிராம அலுவலர் அலுவலகம்.

மேற்குறித்த திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ள காணி தொடர்பான நடமாடும் சேவையின் ஊடாக தங்க ளது காணி தொடர்பான அதாவது ஆவ ணங்களற்று நிலஅளவை வரைபடத் தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணித் துண்டுகளுக்கான சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொது மக்களது நலனைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்தச் சந் தர்ப்பத்தைத் தவறவிடாது பயன் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் சிக்கன்குனியா!

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு பரவியது போல் இந்தியா உட்பட, இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் உள்ள நாடுகளில் சிக்குன்குனியா நோய் பரவல் அபாயம் காணப்படுவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த நோய் தற்போது ஐரோப்பா உட்பட பிற பகுதிகளிலும் பரவி வருவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

சிக்குன்குனியா வைரஸால் பாதிக்கப்படும் அபாயத்தில் 119 நாடுகள் உள்ளன என்றும், சுமார் 560 கோடி மக்கள் இந்தத் தொற்றுக்கு ஆளாகக் கூடிய ஆபத்தில் உள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 2004-2005 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் சிக்குன்குனியா ஒரு தொற்றுநோயாகப் பரவியது. இதன்போது சுமார் ஐந்து லட்சம் பேர் இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த நிலைமை மீண்டும் வரக்கூடிய சூழல் இருப்பதாகச் சுட்டப்படுகின்றது.

சிக்குன்குனியா என்பது ஏடிஸ் வகை நுளம்புகளால் பரவும் ஒரு வைரஸ் நோயாகும். இந்த நோய் காய்ச்சல், சொறி மற்றும் மூட்டு வலிகளால் வகைப்படுத்தப்படுகிறது. இது பொதுவாக கடுமையானதாக இருக்காது, ஆனால் சிலருக்கு தீவிரமான மூட்டு வலி ஏற்படலாம்

சிக்குன்குனியாவுக்கு குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை, ஆனால் அறிகுறிகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஓய்வு, நீரேற்றம் மற்றும் வலி நிவாரண மருந்துகள் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

சிலருக்கு தீவிரமான மூட்டு வலி இருந்தால், மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது.

நுளம்பு கடிப்பதைத் தடுப்பது இந்தத் தொற்றைத் தடுப்பதில் முக்கியமாகும்.

நுளம்புககள் அதிகம் உள்ள இடங்களிலும் நேரங்களிலும் கவனமாக இருக்க வேண்டும்.

நுளம்பு விரட்டிகள், வத்திச் சுருள்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் நுளம்பு வலைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் நுளம்புகளைத் தூர - விலக்கி - வைக்க முடியும்.

வீட்டைச் சுற்றித் தேங்கி நிற்கும் நீரை அகற்றுவதன் வாயிலாக, கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்கலாம்.

மனிதர்களுக்கு இடையே இந்த வைரஸ் தொற்று நேரடியாக ஏற்படுவதில்லை. வைரஸ் ஒருவருக்கு நபர் தொடர்பு மூலம் அல்ல, நுளம்பு கடித்தால் இது பரவுகிறது.

இந்தத் தொற்று நோய் தொடர்பில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்களே இந்த நோய்த்தொற்றினால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்கள் - அதிக ஆபத்துள்ள - குழுக்கள் எனக் கருதப்படுகின்றார்கள்.






# இளைஞர்கள், யுவதிகளுக்கு கல்வி ஊக்குவிப்பு செயலமர்வு

(றிபாஸ்)

அக்ரைப்பற்று அமான் ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் இளைஞர் யுவதிகளுக்கான கல்வி ஊக்குவிப்பு செயலமர்வு ஆலிம் நகர் அஸ் ஸிபாயா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பல்வேறு தலைப்புகளில் துறைசார்ந்த வளவாளர்களைக் கொண்டு இந்தச் செயலமர்வு நடைபெற்றன.

கல்வியின் முக்கியத்துவம், இளைஞர்கள் ஒழுக்கமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்பும் முன்னோடிகள், இளைஞர்கள் அறிய வேண்டிய சட்ட விடயங்கள், இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் மருத்துவப் பிரச்சினைகள், இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கங்கள் போன்ற தலைப்புகளில் வளவாளர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எஸ்.பௌஸ், சட்ட வைத்திய அதிகாரி எஸ். றிபாஸ்டீன், சிரேஷ்ட சட்டத்தரணி கே சமீம், வைத்தியர்களான ஜெஸ்மினா நிபால், எம். எம். மிஸ்பா, எஸ். சித்தி சாமிலா, எம். எஸ். முஹம்மட் பஸீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் கணினிப் பிரிவு திறப்பும் பயிலுநர் இணைப்பும்







**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பயிலுநர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வும், கணினி பிரிவுத் திறப்பு விழாவும் நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பெருந்தோட்டம் மற்றும் உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் பிரத்தியோக செயலாளர் கலாநிதி சிவபிரகாசம், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் முகாமையாளர் கேப்ரியல், னுP. நுனரஉயவழைெ நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக, 25 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட D.P. Education கணினிப் பிரிவை பிரதி அமைச்சர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். இதன் மூலம் மாணவர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்காக 125 புதிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கு மின்சார , வாகனங்கள் திருதுதல் தொடர்பான பயிற்சி, மேசன் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா கொடியேற்றம்!

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றம் நாளை வெள்ளிக்கிழமை ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.



கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 15 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

வெள்ளிக்கிழமை கொடியேற்ற தினத்தன்று அன்னதானம் காரைதீவு ஆலையடிவேம்பு மடங்களில் சிறப்பாக நடைபெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# உணவகம் நடத்துவோர் தாங்களாகவே திருந்தும் பட்சத்தில் சுகாதாரம் பேணப்படும்!

## பொது சுகாதார மேற்பார்வையாளர் கே.சி.வின்சன்ட்

(வாஸ் கூஞ்ஞ)

உணவு உற்பத்தியிலிருந்து வாய்க்குள் உணவு செல்லும் வரைக்கும் உணவு சுத்தமாக இருக்க வேண்டும். உணசு தயாரிப்பில் ஈடுபடுபவர்களும் சுத்தமாக இருக்க வேண்டும். இதற்கு உணவகம் நடத்துவோர் முதலில் மாற வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு நல்ல உணவு கிடைக்கும்.

இவ்வாறு மன்னார் பிரதேச பொது சுகாதார மேற்பார்வையாளர் கே.சி.வின் சன்ட் இவ்வாறு தெரிவித்தார்.



பேசாலைப் பகுதியிலுள்ள உணவ கங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோருக்கான சுகாதார தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வு மன்னார் பிரதேச சபை மண்ட பத்தில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் பிரதேச பொது சுகாதார மேற்பார்வையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உணவு விடயத்தில் நாம் அக்கறை யின்மையாக இருந்து அதில் விளை யாட முடியாது. நாம் தரம்கெட்ட பழைய உணவை உண்ணும்போது அதனால் ஏற்படும் விளைவு என்னவென்று யாவரும் அறிந்த விடயம்.

இதனால் உயிர் போகும் நிலைமை யும் உண்டு என்பதும் தெரிந்த விடயம் ஆகவே உணவு தயாரிக்கும், பரிமாறும் விடயங்களில் நாங்கள் மிகவும் கவனம் செலுத்தும் தன்மையே உண்டு.

இதில் தனிநபர் சுகாதாரம் முக்கி யம். உணவு வகைகளைத் தயாரிக்கும் போதோ அல்லது பரிமாறுகின்றபோதோ உணவகங்களில் அந்த நபர் அடிப்படை சுகாதாரத்தையாவது பேணி இருக்க வேண்டும்.

ஆகவே உங்கள் மனநிலையில் மாற்றம், நம்பிக்கை இருக்க வேண்டும். அதாவது என்னால் தயாரிக்கப்பட்ட உணவு தரம் உடையது எனவும் சுகாதார தன்மை கொண்டதாகவும் இருக்கின்றது என்பதாகும்.

உணவகம் நடத்தும் நீங்கள் வாடிக் கையாளர்களைத் தேடிச் செல்ல வேண் டிய அவசியம் ஏற்படாது. எவ்வாறெ னில் உங்கள் உணவு தரம் உள்ள தாகவும் நல்ல உபசரிப்பும் சுகாதாரமும் இருக்குமாகில் வாடிக்கையாளர்கள் உங்களையே நாடி வருவார்கள்.

பேசாலை பகுதியில் சிறந்த உணவ கங்கள் அமைய வேண்டும் என்பதும் இதன் மட்டில் தீவிர நடவடிக்கையில் ஈடுபட இருப்பதாலேயே முன்னோடியாக உங்களுக்கு இவ்வாறான கருத்தமர்வு களை மேற்கொண்டு வருகின்றோம்.

உணவகம் தொடர்பாகப் பேசாலையில் இருந்து எங்களுக்குப் பெரிய முறைப் பாடுகள் வரவில்லை. இருந்தும் நாங் கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின் றோம்.- என்றார்.

# சாய்ந்தமருது கடற்கரை வீதியில் உள்ள உணவகங்களில் சுகாதாரப் பரிசோதனை!





(நூருல் ஹுதா உமர்)


சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலனகாடத்துக்கு உட்பட்ட, சாய்ந்தமருது கடற்கரையோர வீதியில் அமைந்துள்ள உணவகங்களில் சாய்ந்த மருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் மற்றும் பங் களிப்புடன் சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனையின் போது, மனித நலனுக்கு ஏற்புடையதல்லாத மற்றும் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட உணவகங்கள் கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு எதிரா கச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை களும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சுட்டுத் துண்டுகளில் முறை யான எச்சரிக்கை அறிவித்தல் இன்றி விற்பனை செய்யப்பட்ட குளிர்பானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டு, அது தொடர்பிலும் சார்ந்தும் சட்ட நடவடிக் கைகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தொல்லியல் திணைக்களத்தின் 135ஆவது ஆண்டு நிறைவு!

தொல்லியல் திணைக்களத்தின் 135 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தொல்லியல் வார நிகழ்வு இயக்கச்சி கோட்டையில் நடைபெற்றது.

கிளிநொச்சி தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யூ.ஏ. பந்துலஜீவ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தொல்லியல் திணைக்களப் பிராந்திய உதவிப் பணிப்பாளரது ஆலோசனைக் அமைவாக சிரமதானம் மற்றும் விழிப் புணர்வு நிகழ்வும் நடைபெற்றது.

நிகழ்வில் தொல்லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர்கள், வலய உத்தியோகத்தர்கள், பராமரிப்பு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கோவில்வயல் சி.சி.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.



# திருமலை யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது!













**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வருகை ஆஸ்ரேலியா சிட்னி சிக்ஸஸ் மற்றும் திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ் அணிகளுக் கிடையிலான 40 ஓவர் கொண்ட கடி னப்பந்து போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ் திரேலியா சிட்னி சிக்சஸ் அணியினர் 40 ஓவர் முடிவில் 211:9 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். பதிலெடுத்து துடுப் பெடுத்தாடிய யங்ஒலிம்பிக்ஸ் அணி 3 விக்கெட்டுகளை இழந்து 217 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றியை தமதாக்கினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக யங் ஒலிம்பிக் மாஸ்டர்ஸ் அணியின் தியாகராஜா பிரபாதரனும் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யங் ஒலிம்பிக் மாஸ்டர்ஸ் அணியின் யூட் நிரோசனும் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக சிட்னி சிக்சஸ் அணியின் பிறேமும் சிறந்த களத்தடுப்பாளராக யங் ஒலிம் பிக் மாஸ்டர்ஸ் அணியின் அ.ரோகானும் தெரிவாகினர்.

# சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தால் சக்கரநாற்காலி வழங்கி வைப்பு!

**(த.சுபேசன்)**

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தால் அண்மை யில் தென்மராட்சி மட்டுவில் பகுதியைச் சேர்ந்த தேவைப் பாடுடைய குடும்பம் ஒன்றின் அங்கத்தவருக்கு சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது.

சக்கர நாற்காலி கையளிக்கும் நிகழ்வில் சுன்னா கம் பாரம்பரிய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.





# சர்வதேச ரீதியில் சாதனை புரிந்த சவேரியார் மாணவர் கௌரவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

சர்வதேச ரீதியில் சாதனை புரிந்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து சாதனையாளர்கள் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து சாதனையாளர்கள் பாடசாலை வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் பாடசாலை நுழைவாயிலில் இருந்து பாண்ட் இசை வாத்தியத்துடன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இளையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களான ஓ.சமிசன் பர்னாந்து, ஏ.பிரைசன், ரி. டனுமிதன், சி.டடிசன் ஆகியோருடன் ஜூனியர் கெமிஸ்ட்ரி ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேச ரீதியாக 80 நாடுகளுடன் போட்டியிட்டு மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட மாணவன் எஸ்.அரோன் டியோறி, தேசிய மட்டத்தில் ஆங்கில போட்டியில் கட்டுரை எழுதுதல் போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட ஆறாம் தர மாணவன் வி. திவ்யன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் உதவி மாவட்ட செயலாளர்.டிலிசன் பயஸ், மன்னார் வலய கல்வி திணைக்கள உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஜேக்கப், மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பிறின்ஸ் லெம்பேட், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர வின்சன், மன்னார் மாவட்ட 'றோள் போள்' சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் விமலேஸ்வரன் பாடசாலையின் பிரதி அதிபர். சே.அஜித் ருக்சன் டலிமா பொதுமக்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.ள











# கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தில் கல்முனை பள்ளி வீதிக்குக் 'காப்பெட்'



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசின் கிராமிய வீதி அபிவிருத் தித் திட்டம் 2025 இன் முதல் கட்டமாக அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட கல்முனை பள்ளி வீதிக் கான 'காப்பெட்' இடும் வேலைகள் அம்பாறை மாவட்டக் கரையோர பிர தேச ஒருங்கிணைப்பு குழுத் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவின் வேண்டுகோளின் பேரில் வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதி கார சபையின் கல்முனைப் பிராந்திய நிறைவேற்றுப் பொறியியலாளர் இஸட். ஏ.எம். அஸ்மிர் மற்றும் அதன் உத்தி யோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பி னரின் இணைப்புச் செயலாளர் ஆசிரி யர் எஸ்.எம்.ஆரிப், ஒருங்கிணைப் பாளர் எம்.ஐ. நஜீம் மற்றும் பிரதேசத்தின் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# போசாக்குக் குறைவான பிள்ளைகளின் எதிர்கால நலன் தொடர்பில் விழிப்புணர்வு





(அபு அலா )

அட்டாளைச்சேனை பிரதேசத்தி லுள்ள போசாக்குக் குறைவான நலிவுற்ற, வயதுக்கேற்ப நிறை கூடாத மற்றும் உயரமில்லாத சிறுபிள்ளைகளின் எதிர் கால நலனை கருத்தில் கொண்டு அவர் களின் ஊட்டச் சத்துக்களை ஊக்கு விக்கும் நோக்கில் அப்பிள்ளைகளின் தாய்மார்களுக்கு தெளிவூட்டம் கருத் தரங்கு அட்டாளைச்சேனை பெரிய ஜும்மா பள்ளிவாசல் கலாச்சார மண்ட பத்தில் இடம்பெற்றது.


அட்டாளைசேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸ தீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கு அட்டாளைச்சேனை பிரதேச தாய்மார் ஆதரவு கழகங்களின் ஊடாக அமுல்படுத்தப்பட்டது.

இதில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய், சேய் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் றிப்ஸின் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், தாய்மார் கழகங்களின் உறுப்பினர்கள், பிள்ளைகளின் தாய்மார்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

சிறுவர்களின் எதிர்கால வாழ்வு மற்றும் ஏனைய பிள்ளைகளுடன் சமாந்தரமாக வாழவேண்டும் என்பதற்காக அவர்களை எவ்வாறு பராமரித்துக் கொள்ளவேண்டும், அவர்களுக்கான சத்துமா உணவுகளை எவ்வாறு தயாரிக்க வேண்டும், அத னால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயன் பாடுகள் தொடர்பாக மிகத் தெளிவான விளக்கங்களைச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸ தீன் வழங்கினார்.

இவ்வாறான நடைமுறைகளைத் தாய்மார்கள் பின்பற்றி செயற்படு வதன் மூலம் சிறுவர்களின் செயற் பாடுகள் சிறப்பானதாக அமைவதுடன் அவர்களின் எதிர்கால வாழ்வும் மிகச் சிறப்பாக அமையும். அதேவேளை, ஏனைய பிள்ளைகளுடன் சமாந்தரமாக வாழ்வதற்கும் இது வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, இன்றைய கருத்தரங் கில் கலந்து கொள்ளாத தாய்மார்க ளுக்கு இது தொடர்பான விளக்கங்களை இதில் கலந்துகொண்டவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.




# கறுப்பு ஜூலையும் ஈழப்போர் இலக்கியமும்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

போரின் கொடுமைகளும், தமிழரின் நீண்டகால துயரமும் அவலமும் துயரங்களும் அதனுள்ளே வலிகள் நெருப்பாக இன்னும் நீண்டு கொள்கிறது. 1956 இல் தொடங்கிய தமிழர் இனவழிப்பு மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் உச்சமாக நடைபெற்று, இன்னமும் தமிழர் மீதான அடக்குமுறைகள் தொடரும் நிலையில் இழந்து போன ஓர் தேசத்தின் கனவுச் சிதறல்களாக பதிந்து நிற்கும் கவிதைகளும், ஆக்கங்களுமே ஈழப் போர் இலக்கியத்தில் முதன்மையாகிறது.

கறுப்பு ஜூலை நிகழ்வுகளே இலங்கை இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது.

பாறாங் கல்லெனவே தமிழர் நெஞ்சில் ஆறாமல் கிடக்கும் நினைவுகள் தற்போது எழுத்துருப் பெற்று வருகின்றன. அதனுள் கறுப்பு ஜூலை – ஆடிக்கலவரம் 1983 திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துக்களை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர்வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பவியல் நிகழ்வின் பதிவுகளே ஈழப்போர் இலக்கிய பிறப்பாக உருவகங் கொள்கின்றன.

1983 கறுப்பு ஜூலையை "இனக்கலவரம்" என்ற போர்வைக்குள் நடைபெற்றது தமிழர் மீதான "இனப்படுகொலை" நிகழ்வாகும். உண்மையில் இக்கோர கறுப்பு ஜூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராட தூண்டியது என்று கூறலாம்.

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள். இதன் மூலம் எழுந்த இந்த போராட்ட இலக்கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், மக்கள் படும் துயரத்தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வெளிவந்தன.

1958 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் பின்னணியை சித்திரிக்கும் நாவலாக மு.தளையசிங்கம் எழுதிய "ஒரு தனி வீடு" இலங்கையில் வெளிவந்தது. அவரது முதல் நாவலான ஒரு தனி வீடு 1962 இல் எழுதப்பட்டு 1984 இல் அவர் இறந்து 22 வருடங்களுக்குப் பிறகு தான் வெளிவந்தது.

ஈழத்தமிழருக்கு தனிநாடுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும் என்ற செய்தியைக்கூறும் படைப்பாகவும், இன ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு முதலான மார்க்ஸீய – கம்யூனிஸ சுலோகங்களை விமர்சிக்கும் நாவலாகவும் ஒரு தனி வீடு அமைந்தது.

## கவிஞர்களின் மரணத்துள் வாழ்வோம்

1985 இல் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற பெயரில் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால்வரும் தொகுத்து ஒரு போரியல் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார்கள். முதலில் யாழ்ப்பாணம் தமிழியல் வெளியீடாகவும், பின்னர் கோவை விடியல் பதிப்பகத்தின் வாயிலாக உப்பிலிபாளையத்திலிருந்து 2வது பதிப்பாக டிசம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது.

ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட இக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர்களின் பெண்நிலைப்பட்ட அனுபவங்கள் உயிர்த் துடிப்புடன் வந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.

ஈழத்தின் போர்க்கால கவிதைத்துறையில் நினைவு கொள்ளத்தக்க மற்றொரு கவிஞர் மறைந்த கி.பி.அரவிந்தன் ஆவார். பிரான்ஸ் தேசத்தில் புலம் பெயர்ந்து, வாழ்ந்து காலமான இவர் ஈழப் போராட்டத்தில் விடுதலைப் போராளியாக இருந்தவர்.

இவரது படைப்புக்களில் ஈழவிடுதலைப் போராட்டமும், ஈழத்தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன. மூன்று படைப்புக்களை தமிழகத்திலிருந்து வெளியீடு செய்தவர் இவர். இனி ஒரு வைகறை அவர் எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

தொடர்ச்சி▼

# கறுப்பு ஜூலையும் ஈழப்போர் இலக்கியமும்!

தொடர்ச்சி▲

1992 இல் வெளியான முகம்கொள் கி.பி. அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு ஆகும். கனவின் மீதி. இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். கி.பி.அரவிந்தனின் கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை மட்டுமல்ல, அவ்வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத் தப்பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப்பட்டுள்ளன எனக்கூறலாம்.

### செங்கை ஆழியானின் ஈழப் போர் இலக்கியம்

ஈழத்து போர்க்கால நாவல் இலக்கிய வரலாற் றில் படைப்பாளுமை மிக்கவர் செங்கை ஆழியான் ஆவார். மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர் எனும் பெருமைக்குரிய செங்கை ஆழியானின் புதினங்கள், சிறுகதைகள், புவி யியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறை களிலும் என அவரின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

### 1977 இனக்கலவர ஆவணம்

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இனக்கல வரத்தின் போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச வன்முறைகள் பற்றி செங்கை ஆழியான் எழுதிய “24 மணி நேரம்”என்கிற நூல் முக்கிய மான வரலாற்று ஆவணமாகும். ஈழத்து போர்க்கால வரலாற்றினை சிறுகதை, நாவல் இலக்கியமாக எதிர்கால சந்ததிக்கு வெளிப்படுத்திய

படைப்பாளுமை மிக்க செங்கை ஆழியானின் பணி ஈழ வரலாற்றில் என்றும் போற்றப்படும்.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற் பாடுகளில் அவரது ஆவணப்படுத்தல் முயற்சி மிக முக்கியமானது ஆகும். மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவளியைப் பற்றி அவர் எழுதிய “12 மணி நேரம்” என்கிற நூல் இயற்கை இடரின் துயரத்தை வர லாற்று வரிகளாக்கிய நூலாகும். இந்த இரண்டு நூல்களையும் நீல வண்ணன் என்ற புனைபெயரில் எழுதியுள்ளார்.

### ‘தீம்தரிகிடதித்தோம்’ நாவல்


ஈழப்போராட்த்தின் மூல வேர் எது என்பதை அரசியல் பின்னணியோடு தொட்டுக் காட்டு கிறது ‘தீம்தரிகிடதித்தோம்’ எனும் நாவல். இந்த நாவலில் இலங்கை அரசு 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவந்த போது மலர்ந்த கற்பனை காதல் கதையை சொல்கிறது.

சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்ட போது தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்ற முதுபெரும் தலைவர்கள் சாத்விக முறை யில் கிளர்ச்சி நடத்தி, தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தெரிவித்ததை வெளிப்படுத்தும் இந்த நாவலும் ஓர் வரலாற்று நூலாக எழுகிறது.

இந்த நாவலில் புதுமை என்னவென்றால் தனிச்சிங்கள மொழிச் சட்ட விவாதம் நடந்த போது எடுக்கப்பட்ட குறிப்புகளும், விவாதமும் காட்டப்பட்டிருக்கும் களம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் தமிழ் இளை ஞனுக்கும் சிங்களப் பெண்ணுக்குமான காதல் களம் காட்டப்பட்டிருக்கும். நாவல் முடியும் போது இனக்கலவரம் ஆரம்பிக்க அவர்களின் காதலும் இனவெறியில் எரிந்து போகும்.

அத்தோடு அறவழியில் நடந்த போராட்டத்தை ‘சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடை யிலான போர்’ என்று திசைதிருப்பு, அன்றைய இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா, பொலிஸ ாரின் துணையோடு சிங்கள சமூக விரோதிகளை ஏவிவிட்டு போராடிய ஈழத்தமிழர்களை அடித்து நொறுக்கினார். பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் வாழக்கூடிய தமிழ்ப்பிரதேசங்களில் சிங் களவர்களை வலுக்கட்டாயமாக குடி அமர்த்தி னார். பொருளாதார, சமூக நெருக்கடிகளை ஏற் படுத்தினார். தமிழ் மக்களின் அனைத்து எதிர்ப்புகளை மீறி சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்கினார்.

தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி இரண் டாந்தர குடிமக்களாக்கும் பிரிவினை உணர்வை ஏற்படுத்தினார். சிங்கள ஆட்சியின் கொடு மையை இனியும் சகிக்க முடியாது என்ற சூழ் நிலையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதையும் இந்




நாவல் சித்தரிக்கிறது.

### திட்டமிட்ட இனப் படுகொலைகள்

சிங்கள அரசுகளால் 1977, 1983 ஆண்டு களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கல வர வன்முறைகளும் தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமைக்கான அவசியத்தையும் தனி நாடு ஒன்றுக்கான தேவையையும் வலியுறுத்தின. இந்த காலகட்ட போராட்ட வாழ்வே ஈழ இலக்கி யப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்றும் கருத இடமுண்டு.

1981 இல் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்களை சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப் போராட்டமுறைகளை இளைஞர்கள் மட்டுமே பங்கேற்றி வந்த சூழல் மாறி, அறிவுசார்


தொடர்ச்சி▼

# கறுப்பு ஜூலையும் ஈழப்போர் இலக்கியமும்!

தொடர்ச்சி▲

புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும்




இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

### புதுவை இரத்தினதுரை கவியுகம்

கவிஞர் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" எனும் நூலாகும். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதை அக்கு வேறு ஆணி வேறாகத் தனது பேனாமுனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங்கூரம் வெளியீடாக, பங்குனி 2005இல் வெளியானது. இத்தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993இல் வெளிவந்த "தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே" என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகையின் மாசி 2005இல் வெளியான "இருந்ததும் இல்லையென்றானதும்" என்ற கவிதை வரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத்தம் 155 கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன.

### 1981 யாழ் நூலகம் எரிப்பு

ஈழ ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்பகாலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றோரின் விடுதலை உணர்ச்சி மிக்க படைப்புகளை சுதந்திரன், தீப்பொறி போன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன.

ஸ்ரீலங்கா அரசின் பாரிய வன்முறை கெடுபிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப்படையாக அச்சிட முடியாத நிலை அந்தக் காலத்தில் காணப்பட்டது.

அத்துடன் ஆரம்பகால விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங்கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகளவில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

அதேவேளை இனவிடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்நாட்களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தகைய இலக்கியங்களைப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது என்பதும் உண்மையே.

### ஈழத்தின் போரியல் வரலாறு

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடைமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

சர்வதேச வரலாற்றில் ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்களில், நின்று நிலைத்திருக்கப்போகும் வலிமைபெற்ற போரியல் இலக்கியத்தின் நீட்சி இன்னமும் தொடர்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு பிறகு இலங்கை சுதந்திரத்தின் பின்னர்,சின்னஞ்சிறு மாங்காய்த் தீவில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த காலகட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் தெறித்து வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத்தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியும் இருந்தன. இந்த காலகட்டத்தில் வந்த இலக்கிய படைப்புகள் இலங்கை தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை மக்களுக்கு ஏற்படுத்தின.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் இலக்கிய போக்குகளில் பல மாற்றம் அடைந்திருக்கின்றன. தமிழரின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்விகப் போராட்டங்களின் வழியாக அடக்குமுறைகளுக்


தொடர்ச்சி▼

# கறுப்பு ஜூலையும் ஈழப்போர் இலக்கியமும்!

**தொடர்ச்சி▲**

குத் தீர்வுகாண முயன்று தோல்வி கண்டமை இன்று வரலாறாகி விட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் சாத்வீகப் போராட்ட







நிலையிலிருந்து ஆயுதப் போராட்டமுறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப் பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.


**செம்மணி கோரம்**

'செம்மணி' என்ற தலைப்பில் வெளியான நூலில் 24 கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றிருந்தன. வெளிச்சம் வெளியீடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்பாட்டுக் கழகத்தின் நடுவப் பணியகம், செப்டெம்பர் 1998இல் இத்தொகுப்பை வெளியிட்டது. யாழ்ப்பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போனோராக்கப்பட்டு வதையின் பின் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவை.

1995இல் ரிவிரச என்ற யாழ்ப்பாண ஆக்கிரமிப்புப் போரின்பின், தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தஞ்சமடைந்த தமிழ்மக்களை மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கைமூலம் சிறைப்படுத்திச் சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றது. அக்காலகட்டத்தில் சிங்கள இராணுவம் அவர்களை யாருங்காணாமற் பிடித்துச்சென்று படுகொலை செய்து செம்மணியிற் புதைத்த வஞ்சகச்செயலை அம்பலப்படுத்தும் பதிவுகளாக இவை அமைகின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமாகவே இக்கவிதைகள் அமைகின்றன.

சிறுகதை, நாவல் இலக்கியத் துறையில் போரியல் பதிவுகள் ஏராளமாக ஈழத்தமிழர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. 1980களிலிருந்து ஈழத்தில் வெளியாகும் சிறுகதைகளில் இதன் பாதிப்பு பெரிதளவில் இருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாக வன்னி மண்ணிலிருந்து வெளியாகும் படைப்பிலக்கியங்கள் அனைத்திலும் இதன் பாதிப்பு துலக்கமாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுகள் கொண்டு வரும் கொடூர சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. 1980 ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டுகாலமாக தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகி



போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர். போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம்பெயர் இலக்கியங்கள் உருவாகின.

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் ஞானச்சுடர் 331ஆவது மலர் வெளியீடு!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஞானச்சுடர் ஆடி மாத 331 ஆவது மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

வெளியீட்டுரையைச் செல்வி தயாளினி குமாரசாமியும் மதிப்பீட்டுரையை சைவப் புலவர், ஆசிரியர் திருமதி சசிலேகா ஜெயராஜன் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு 10.30 மணி தொடக்கம் இடம்பெறும்.



# வவுனியாவில் உயர்தர வணிகப் பிரிவு மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

“வியாபாரமும் துணைநிலைச் சேவைகளும்” என்ற தலைப்பில் வணிகக் கல்வி கருத்தரங்கு வவுனியாவின் இரம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையின் சந்தைப்படுத்தல் கழகமும் மற்றும் வவுனியா கல்வி வலயமும் இணைந்து மேற்கொண்டனர்.

வவுனியா வலயத்தை சேர்ந்த 14 பாடசாலைகளை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கருந்தரங்கு வளவாளர்களான சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ர விரிவுரையாளர்களான எஸ்.ஏ. யூட் லியோன், திருமதி கயேந்தி, சிவநேந்திரா, துஷ்யந்தன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு அமர்வும் மாணவர்களுக்கு ஆழமான விளக்கங்கள், நிஜ வாழ்க்கை உதாரணங்கள் மற்றும் கலந்துரையாடல்களை வழங்கி, அவர்களின் கல்விக்கு மேலும் செறிவூட்டும் விதமாக அமைந்திருந்தது.

இந்த முயற்சியானது வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சமூகத்தில் ஈடுபாடும், வளமான கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பதையும், கல்வி கருந்தரங்குகளை முன்னெடுக்கும் செயலில் ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

கருத்தரங்கை வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி சுபாஜினி மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.சிவநேந்திரா ஆகியோர் ஒழுங்கு செய்தனர்.

துணைவேந்தர் பேராசிரியர் ஏ. அற்புதராசா, பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்தகோபன் மற்றும் வலயகல்வி பணிப்பாளர் உத்தியோகத்தர்களுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் நன்றி தெரிவித்தனர்.








# பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு போராட்டம் மீண்டும் கிராமங்களில் பரவுவதால் பதற்றம்

ஏகனாபுரத்தை மையமாக வைத்து நடைபெற்று வந்த பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு போராட்டம் விரி வடைந்து நேற்று வளத்தோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பொதுமக்கள் பரந் தூர் விமான நிலையத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் சுற்றுவட்டார கிராமங்களை உள்ள டக்கி பசுமை வெளி விமான நிலை யம் அமைக்க மத்திய, மாநில அரசு கள் நடவடிக்கை எடுத்து வருகின் றன.

பரந்தூர் மற்றும் அதனை சுற்றி யுள்ள 13 கிராமங்களில் இருந்து 5300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. ஏகானாபுரம் உள்ளிட்ட சில கிராமங்கள் முழுமையாக கையகப் படுத்தப்பட உள்ளன.

விவசாய நிலங்கள், வீடுகள், மனை கள், ஏரி, குளங்கள் என பல்வேறு வகையான நிலங்கள் இந்த விமான நிலையத்துக்காக கையகப்படுத்தப்பட உள்ளன.

இந்த விமான நிலையம் அமைப் பதற்கான இடங்களை தேர்வு செய்து நிலம் கையகப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் எடுத்து வருகிறது. இந்த அமைப்பு சார்பில் அறிவிப்புகள் வெளியிடப் பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

புதிய விமான நிலைய திட்டத் துக்காக நிலங்களை கையகப்படுத்தி பத்திரப் பதிவு செய்து, நில உரிமை யாளர்களின் வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கும் முயற்சியை விமான நிலைய திட்ட அதிகாரிகள் எடுத்து வருகின்றனர். இதுவரை 19 பேரிடம் இருந்து நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. நிலங்கள் வாங்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் தீவிரமடைந்தது.

தங்கள் கோரிக்கைக்கு மதிப் பில்லை என்று கூறி ஏகனாபுரம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். இவர்களுக்கு பல்வேறு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். சட்டப்போராட்டம் நடத்துவதற்கான நடவடிக்கைகளிலும் போராட்டக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பரந்தூர் பசுமை விமான நிலைய திட்ட எதிர்ப்பு போராட்டக் குழு, ஏக னாபுரத்தில் நடத்தி வரும் போராட்டம் 1,095 ஆவது நாளை எட்டியுள்ள நிலை யில் வளத்தோட்டம் மக்களும் போராட்டத்தை தொடங்கியுள்ளனர். 200 இற்கும் மேற்பட்டோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் விமான நிலையத் திட்டத்தை கைவிடக்கோரி கோஷங்களை எழுப்பினர். இந்தப் போராட்டத்தில் ஏகனாபுரம் மக்கள் மற்றும் போராட் டக் குழுவினர் உட்பட பலர் பங்கேற் றனர். அரசியல் கட்சி நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

இது குறித்து இந்தப் பகுதி பொது மக்கள் கூறும்போது,

“இந்த நிலத்தை நம்பிதான் எங்கள் வாழ்வாதாரம் உள்ளது. எங்களை இங்கிருந்து அப்புறப்படுத்த முடியாது. நாங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம். உயிரை கொடுத்தாவது எங்கள் இடத்தை பாதுகாப்போம்.” என்றனர்.

இந்தப் போராட்டம் காரணமாக காஞ்சிபுரம், பரந்தூர் மற்றும் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் பதற்றம் நிலவியது.



# கச்சதீவு விவகாரத்தில் இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## இந்திய நாடாளுமன்றத்தில் வைகோ வலியுறுத்தல்



கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் மற்றும் படகுகள் சேதமடைந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கு, இலங்கை அரசிற்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே வைகோ இவ்வாறு வலியுறுத்தியிருந்தார். இது குறித்து வைகோ மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவது ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இது வரை கைது செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை 150 ஆக பதிவாகியுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் எண்ணிக்கை 20 ஆகவும் உயர்ந்துள்ளன. இதனால் மீனவ குடும்பத்தினர் பெரும் நிதி நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் தங்கள் உறவினர்களை விடுவிப்பதற்காக பெரிய அபராதங்களை கட்ட வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

கடந்த 13 ஆம் திகதி ஆறு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மேலும் அவர்களின் மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்ட கொடூரம் நடைபெற்றுள்ளது. பாக் விரிகுடாவில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பறிக்கும் வகையில் இலங்கை கடற்படை தொடர்ந்து அத்துமீறி வருகிறது.

இது இந்திய ஒன்றிய அரசுக்கு பெரும் சவாலாக உள்ளது. அடிக்கடி தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதாலும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதாலும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றன.

எனவே கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

எதிர்காலத்தில் மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும் மீனவ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு தீர்வுகாண வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் மற்றும் படகுகள் சேதமடைந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கு இலங்கை அரசிற்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து கச்சதீவையும் திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.



# ரவி மோகனுக்கு மீண்டும் நெருக்கடி

புதிய படத்தில் நடிப்பதற்காகப் பெற்றுக்கொண்ட முற்பணத்தைத் திருப்பிக் கொடுக்காத விவகாரத்தில், நடிகர் ரவி மோகன், இந்திய மதிப்பில் 5.90 கோடிக்கான சொத்து ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ப்ரோ கோட் என்ற புதிய திரைப் படத்தில் நடிப்பதற்காக, படத் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் நடிகர் ரவி மோகனுக்கு முற்பணம் கொடுக்கப்பட்டது.

அந்த படத்திற்கான படப்பிடிப்பு ஆரம்பிக்காத நிலையில், அந்த நிறுவனம் வழங்கியிருந்த முற்பணத்தை ரவி மோகனிடம் கோரியிருந்தது.

இந்நிலையில் படத் தயாரிப்பு நிறுவனம் இந்திய மதிப்பில் 9 கோடி ரூபா இழப்பீடு தர வேண்டும் என்று கேட்டு ரவி மோகன், சென்னை மேல் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

தயாரிப்பு நிறுவனம் சார்பில், நடிகர் ரவி மோகன் வாங்கிய முற்பணத்தைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு தொடரப்பட்டது.

நேற்று சென்னை மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில், சொத்து ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை மேல் நீதிமன்றம் நடிகர் ரவி மோகனுக்கு உத்தரவிட்டுள்ளது.

# அணுசக்தி செறிவூட்டலினை ஒருபோதும் கைவிட முடியாது

## ஈரான் அறிவிப்பு



அணுசக்தி திட்டம் தமது விஞ்ஞானிகளின் சாதனை என்பதால், அணுசக்தி செறிவூட்டலை தாங்கள் ஒருபோதும் கைவிட முடியாது என ஈரான் அறிவித்துள்ளது.

அணு ஆயுதத்தை ஈரான் தயாரிப்பதாகக் கூறி அந்த நாட்டின் மீது இஸ்ரேல் கடந்த மாதம் தாக்குதல் நடத்தியது.

இதற்குப் பதிலடியாக ஈரானும் தாக்குதல் நடத்தியது.

அதன்பின்னர், இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இதனிடையே அணுசக்தி திட்டத்தை ஈரான் கைவிட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் அணுசக்தி திட்டத்தை மீண்டும் தொடங்கினால் தாக்குதல் நடத்துவோம் எனவும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் அணுசக்தி திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தாக்குதலில் தீவிரமான சேதங்கள் ஏற்பட்டதால் அணுசக்தி திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அல்கொய்தா தீவிரவாதிகள் நால்வர் குஜராத்தில் கைது



அல்கொய்தா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நால்வரைக் குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்கள் சமூக ஊடகங்கள் மூலம் தீவிரவாத செயல்களுக்கு ஆட்களைச் சேர்த்து வந்தனர் என தெரியவந்துள்ளது.

அவர்களில் இருவர் குஜராத்திலும், ஒருவர் டில்லியிலும், மற்றொருவர் நொய்டாவிலும் கைதாகியுள்ளதாக அந்நாட்டுக் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கலிபோர்னியா மாநிலத்தில் நடமாடும் வீடுகளுக்குத் தடை

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் நடமாடும் வீடுகளுக்குத் தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் பலரும் வாகனங்களிலேயே வீடு போன்ற வசதியை உருவாக்கி அதில் குடியேறுகின்றனர்.

இந்த வாகனங்கள் ஆங்காங்கே வீதியோரம் நின்று நடமாடும் வீடு போல செயற்படுகின்றன.

இந்தநிலையில், நடமாடும் வீடுகளால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதையடுத்து, அந்த வீடுகளைத் தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடைபாதைகளை சுத்தமாக வைத்திருப்பதற்காக சான் பிரான்சிஸ்கோ நகர நிர்வாகம் குறித்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# அச்சத்தை ஏற்படுத்தும் சிக்குன்குனியா; உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு பரவியது போல் இந்தியா உட்பட, இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் உள்ள நாடுகளில் சிக்குன்குனியா நோய் பரவல் அபாயம் காணப்படுவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

நோய்ப் பரவல் தற்போது ஐரோப்பா உட்பட பிற பகுதிகளிலும் பரவி வருவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த வைரஸால் பாதிக்கப்படும் அபாயத்தில் 119 நாடுகள் உள்ளதுடன், சுமார் 5.6 பில்லியன் மக்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 2004 - 2005 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் சிக்குன்குனியா ஒரு தொற்றுநோயாகப் பரவியது.

இதன்போது சுமார் 500,000 பேர் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

வியாழக்கிழமை 24/07/2025

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் பீல் பகுதியில் உள்ள மிசிசாகாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் காலை 4.30 மணியளவில் கா:.த்ரா 02



# தமிழ் இனப்படுகொலையை ஒருபோதும் மறக்கக்கூடாது

## கனடாவின் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் தெரிவிப்பு

**தமிழ் இனப்படுகொலையை ஒரு போதும் மறக்கக்கூடாது என கனடா வின் கன்சர்வேழிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லீவ்ரே தெரிவித்துள்ளார்.**

**கருப்பு ஜுலையின் 42ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,**

“ இலங்கையின் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதை குழியில் குழந்தைகள் உட்பட பல தமிழ் மக்களின் எச்சங்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது செய்யப்பட்ட அட்டூழியங்களின் ஒரு சிலிர்க்க வைக்கும் நினைவூட்டலாக இந்த கண்டுபிடிப்புக்கள் உள்ளன.

தமிழ் இனப்படுகொலையை ஒரு போதும் மறக்கக்கூடாது என்பதோடு தமிழ் கனடியர்களுடன் ஒற்றுமையை வலியுறுத்தி நீதிக்காக குரல் கொடுப் போம்.

எனது தலைமையில் உள்ள கன்சர்வேடிவ் கட்சி, எப்போதும் தமிழ் இனப் படுகொலையை அங்கீகரிக்கும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவுடன் உறவை வலுப்படுத்த கனடிய முதல்வர்கள் கோரிக்கை

அமெரிக்காவுடனான வர்த்தக போர் தொடர்ந்து கூடியுள்ள நிலை யில், கனடாவின் மாகாண முதல் வர்கள் சீனாவுடன் உறவை மேம் படுத்த வேண்டும் என்று வலியுறுத் தியுள்ளனர்.

ஹன்ட்ஸ்வில்லே, ஒன்டாரியோ வில் நடைபெற்ற Council of the Federation மாநாட்டின் இறுதிநாளான நேற்று மாகாண முதல்வர்கள் ஒன்றாக கூடி இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர்.

சஸ்காச்சுவான் முதல்வர் ஸ்காட் மோ மற்றும் ஒன்டாரியோ முதல்வர் டக் :.போர்ட், இருவரும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதிக்



கும் வரிகள் மற்றும் பொருளாதார அச்சுறுத்தல்களுக்கு எதிராக, கனடா சீனாவுடன் உறவை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி யுள்ளனர்.

அமெரிக்கா மீது நமது சார்பை குறைக்க விரும்புகிறோம் என்றால், புதிய உற்பத்தி பொருட்கள் வழியா கவே அதைச் செய்ய முடியும். அதற் காக நாம் சீனாவுடன் உறவை விரிவு படுத்த வேண்டும் என ஸ்காட் மோ கூறியுள்ளார்.

அமெரிக்கா விதித்த உருக்கு வரி கள் மற்றும் சீனாவின் மறைமுக உற்பத்தி தள்ளுபடி காரணமாக, மாகாணங்களுக்குள் உள்ள முக்கிய உருக்கு தொழிற்சாலைகள் பாதிக்கப் பட்டுள்ளன.

வின்ஸ்டன் சேர்ச்சில் Churchill கூறியது போல, நம்முடைய எதிரி யின் எதிரி நம்முடைய நண்பன். நான் அமெரிக்காவை எதிரி என்று நினைப் பதில்லை. ஆனால், தற்போது ஜனாதி பதி டிரம்ப் தன்னைத் தான் 02



# கனடாவிலிருந்து கிரீன்லாந்துக்கு பயணித்த படகை காணவில்லை

கனடாவின் லாப்ரடார் மாகாணத்தின் தென்கிழக்கு கடற்கரையோரத்தில் கிரீன்லாந்துக்குப் பயணித்த ஒரு 6 மீற்றர் நீள படகு காணாமல் போனதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


தொன்னெரே எனும் பெயருடைய இந்த படகு, க்யூபெக்கில் உள்ள ப்லாஞ்ச்-சாப்லான் நகரத்திலிருந்து புறப்பட்டு, கிரீன்லாந்தை நோக்கிய தனிப்பட்ட பயணத்தில் இருந்தது.

படகில் ஒரே ஒரு நபர் மட்டுமே இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமை, ஒரு நபர் செயின்ட் ஜான்ஸ், நியூபவுண்லாந்தில் உள்ள கடற்படை மீட்பு மையத்துக்கு அழைத்ததன் பேரில், இந்தப் படகு வழிதவறியதாக அறியப்பட்டது.

இந்த படகு கடைசியாக நியூபவுண்லாந்திலிருந்து சுமார் 296 கிலோமீற்றர்கள் கிழக்கே கார்ட்ரைட் பகுதியில் இருந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

தொன்னெரே படகை தேடும் பணிகளில் பல விமானங்களும், Des Groseilliers மற்றும் Amundsen ஆகிய கடற்படை கப்பல்களும் ஈடுபட் டுள்ளன.

எனினும், தேடுதல் நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து தற்போது வரையில் படகு எங்கும் காணப்படவோ, அதிலிருந்து எந்தவொரு தொடர்பும் கிடைத்ததவோ இல்லை என கனடா கடற்படை தெரிவித்துள்ளது.



## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி மற்றும் டண்டாஸ் ஸ்ட்ரீட் ஈஸ்ட் சந்திப்பில் இடம்பெற்றுள்ளது.

பீல் பிராந்தியக் பொலிஸாரின் தகவலின்படி, முதலில் தீவிரமான காயங்களுடன் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட அந்த நபர், பின்னர் உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

தகவல்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக கா.ஃ்ரா சாலை இரு புறமும் தற்போது முடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்த நபரின் ஆள் அடையாள விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

## சீனாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரியாக நடத்திக்கொள்கிறார் என ஃபோர்ட் விமர்சித்துள்ளார்.

ஒன்டாரியோ மாநிலம் மட்டும் வருடத்திற்கு 40 பில்லியன் டொலர் மதிப்புள்ள சீன பொருள்களை இறக்குமதி செய்கிறது, ஆனால் வெறும் 3 பில்லியன் டொலர் மதிப்பேற்றும் பொருள்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் 75 ஆவது இடத்தைப் பிடித்தது கனடா

உலகின் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் 54.2 புள்ளிகளுடன் கனடா 75 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இந்த விகிதம், பொது பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாக கொண்டு நம்பியோ தரவுத் தளம் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் பாதுகாப்பான நாடுகள் பட்டியலை வெளியிடுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு நம்பியோ பாதுகாப்பு குறியீட்டின்படி 2025 ஆம் ஆண்டில் உலகின் பாதுகாப்பான நாடாக பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினுக்கு இடையில் அமைந்துள்ள ஒரு சிறிய ஐரோப்பிய நாடான அன்டோரா உள்ளது. 2 ஆவது இடத்தில் ஐக்கிய அரபு அமீரகமும், 3 ஆவது இடத்தில் கட்டார் நாடுகளும் உள்ளன.

147 நாடுகளில், கனடா 54.2 புள்ளிகளுடன் 66 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இந்தியா 55.7 புள்ளிகளுடன் 66 ஆவது இடத்தை பிடித்துள்ளதுடன் அமெரிக்கா 50.8 புள்ளிகளுடன் 89 ஆவது இடமும், இலங்கை 59 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

இந்த தரவரிசையில் 19.3 புள்ளிகளுடன் கடைசி இடத்தில், அதாவது மோசமான பாதுகாப்பு கொண்ட நாடாக வெனிசுலா உள்ளது.



# தனது அறையில் தங்கியிருந்த நண்பரை கொலை செய்தவருக்கு சிறைத் தண்டனை

கனடாவின் சஸ்காடூனில், தனது அறையில் தங்கியிருந்த நண்பரை கொலை செய்த நாடர் பட்டர் என்பவருக்கு 13 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி இடம்பெற்றது.

அதில் 35 வயதான ஸ்டெபன் போல் என்பவர், தலையில் பலமுறை சுத்தியால் அடிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அவரை படுகொலை செய்ததை நாடர் பட்டர் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளின் ஒப்பந்தக் கூற்று மூலம், குற்றம் நிகழ்ந்த போது அவர் மது மற்றும் 'மாஜிக் மஷ்ரூம்கள்' எனும் போதை மருந்துகளால் மயக்க நிலையிலிருந்தார் என குறிப்பிடப்பட்டது.

2025 ஜூன் மாதத்தில் நடந்த தண்டனை விசாரணையின் போது, அரசு தரப்பு சட்டத்தரணிகள் ஏற்கனவே சிறையில் கழித்த நாள்களை கணக்கில் கொண்டு, 11 ஆண்டுகள் சிறை தண்டனை கோரினர்.

பிரதிவாதியின் தரப்போ, சிக்கலான நெறிச்சாய்வு நிலையை (moral culpability) முன்னிறுத்தி, ஒரு நாள் சிறை + 3 ஆண்டு நிபந்தனைக்குட்பட்ட விடுதலை என மிகவும் குறைந்த தண்டனையை கோரியது. ஏற்கனவே சிறையில் கழித்த நாள்களை கழித்துக் கொண்டு மீதமுள்ள தண்டனை காலம் - 9 ஆண்டுகள் 4 மாதங்கள் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.